# ஒட்டன்சத்திரம் நகராட்சி

மதுரை மண்டலம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசாணை(நிலை) எண். 68 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(தேர்தல்) நாள்.30.06.2018—ன்படி 1920—ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 375 B—ன் கீழ் அவசரக் கூட்டம் நாள். 15.02.2019 (வெள்ளிக் கிழமை) அன்று மாலை 5.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

நகராட்சி அலுவலகம்
நாள்: 15.02.2019

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

**<u>பொருள் : 1</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் கடந்த இரண்டு ஆண்டு தமிழக அரசின் திட்டப்பணிகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல் அவர்களின் பரிந்துரையின் பேரில் கீழ்க்காணும் தினசரி நாளிதழ்களில் வெளியீடு செய்தமைக்காக, மேற்படி நாளிதழ் நிறுவனங்கள் மூலம் வரப்பெற்ற பட்டியல் தொகையினை வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தினமலர் | 14,700/– |
| 2 | மாலை முரசு | 17,850/– |
| 3 | தினமணி | 14,700/– |
| 4 | மாலை தமிழகம் | 12,600/– |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. அனுமதிக்கலாம் .
2. மேற்படி விளம்பர செலவின தொகையினை தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கிடவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 31**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 2</u>**

மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 1957/2018/அ5 நாள்.25.01.2019 –ன்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் – 2018–2019ம் நிதியின் கீழ் 4வது வார்டு கபர்ஸ்தான் மயாணத்தில் தெற்கு பகுதியில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிகளுக்காக 14.02.2019–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. பி.வேலுச்சாமி | 0.04 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.ஹச்.முகமது ரஸ்மீ | 2.31% மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்துபுள்ளிகளில் வரிசை எண். 1–ல் உள்ள ஒப்பந்ததாரரிடம் இருந்து மட்டும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி ஒப்பந்ததாரர் திரு. பி.வேலுச்சாமி என்பவர் 0.04% மதிப்பீட்டு விலையில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு. பி.வேலுச்சாமி என்பவரின் 0.04 மதிப்பீட்டு விலையில் குறைவான ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை அனுமதிக்கலாம். (ந.க.எண். 186/2019/இ1) 32

**தீர்மான எண். 32**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் – 3**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 18 வார்டு பகுதிகளில் தானியங்கி குடிநீர் இயந்திரம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.17018/2018/குவ1 நாள்.23.08.2018–ல் நகராட்சி 1 முதல் 18 வார்டுகளிலும் இடம் தேர்வு செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து மேற்காணும் பணிக்கு 06.02.2019–ந் தேதியில் இரண்டு உறை ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. தானியங்கி குடிநீர் இயந்திரம் அமைக்கும் பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளி (Technical Bid) திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டதில்

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|
| 1 | M/S.Enrich Engineers, Chennai | தொழில்நுட்ப தகுதி நிறைவு செய்கிறது |
| 2 | M/S.HMR Construction, Oddanchatram | தொழில்நுட்ப தகுதி நிறைவு செய்யவில்லை |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் **M/S.Enrich Engineers, Chennai** நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப ரீதியாக தகுதி வாய்ந்தது என இந்நகராட்சி ஒப்பந்தப்புள்ளி ஒப்பு நோக்கும் குழுவினரால் 06.02.2019 ஆம் தேதிய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அதன்படி, 13.02.2019 மாலை 3.30 மணியளவில் ஒப்பந்ததாரர்களின் விலை ஒப்பந்தப்புள்ளி (Price Bid) திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் (Comparative Statement) தயார் செய்யப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| Sl. No. | Description | Rate to be remitted to the Municipality (Rupees per 20 Ltr.) | Rate to be charged for sale to public (Rupees per 20 Ltr.) | Rate be charged for sale to public (Rupees per 1 Ltr from chilling machine) |
|---|---|---|---|---|
| 1 | Establishment of 1000 Ltr./Hr. capacity community drinking water system through Reverse Osmosis with UV treatment in at Oddanchachatram City Municipality under PPP mode. | Rs.0.50 / 20 liters sold at Plant Site (Rupees Fifty paise only) | Rs.7.00/- at Plant Site | Rs.1.00/- at Plant Site - |

பணியின் அவசர அவசியம் கருதியும், திட்டப் பணி என்பதாலும், பணியினை விரைந்து முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதாலும், மூன்றாம் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதாலும் மேற்காணுமாறு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **M/S.Enrich Engineers, Chennai** நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 873/2018/இ1)

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1) அனுமதி வழங்கலாம். ( DBFOT Basis )
2) இப்பணியினை பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு நிதி (CSR Fund) / தனியார் மூலமாக மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்
3) தொழில்நுட்ப ரீதியாக தகுதி வாய்ந்ததாகவும், இப்பணியில் முன் அனுபவம் உள்ளதாகவும் உள்ள **M/S.Enrich Engineers, Chennai** நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
4) பணியின் அவசர அவசியம் கருதி இப்பணிக்கு **M/S.Enrich Engineers, Chennai** நிறுவனத்தினருக்கு வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 33**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் – 4**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் அடிப்படை கட்டமைப்பு திட்டம் 2018–19–ன் கீழ் ரூ.1500.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப்பபணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.12981/2018/இ3 நாள்.17.07.2018–ல் 8 சிப்பங்களாக பணிகள் தேர்வு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து 8 சிப்பங்களுக்கான மதிப்பீடுகளுக்கும் தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.20308/2018/DO2 நாள்.23.08.2018–ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது.

இதனை தொடர்ந்து மேற்காணும் சிப்பம் –7க்கு 31.01.2019–ந் தேதியில் இரண்டு உறை ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. சிப்பம் –7 மதிப்பீடு ரூ.200.00 இலட்சம் பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளி (Technical Bid) திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டதில் M/s. சபரி கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் மற்றும் திரு.வி.பெரியசாமி, பழனி ஆகிய இருவரின் தகுதிக்காண் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நிறைவு செய்வதால் மேற்படியாளர்களின் விலை விகித ஒப்பந்தப்புள்ளிகள் (Price Bid) 07.02.2019–ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது விபரம் பின்வருமாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/s. சபரி கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் | மதிப்பீட்டினைக்காட்டிலும் 6.00 % அதிகம் |
| 2 | திரு.வி.பெரியசாமி, பழனி | மதிப்பீட்டினைக்காட்டிலும் 10.29 % அதிகம் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டினைக் காட்டிலும் கூடுதல் விலை விகிதமாக இருப்பதால், மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலை விகிதம் குறைவாக கொடுத்துள்ள M/s. சபரி கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் என்பவரின் மதிப்பீட்டினைக்காட்டிலும் 6.00% கூடுதல் விலை விகிதத்தினை குறைத்து தரக்கோரி சம்மதக்கடிதம் (Consent Letter) கோரியதில் மேற்படியார் தனது 08.02.2019 தேதிய கடிதத்தில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.75 % உயர்வு சதவீதத்தில் மட்டுமே செய்து தர இயலும் என கடிதம் அளித்துள்ளது. தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்காணும் திட்ட பணியினை 31.03.2019–க்குள் முழுவதுமாக முடித்து பணி முடிவறிக்கை நிதி பயனீட்டு சான்றிதழ் அளித்திட நகராட்சி நிர்வாக ஆணையர் ஆய்வு கூட்ட அறிவுரையில் பணிக்கப்பட்டுள்ளதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால், ஏற்படும் காலாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், மதிப்பீட்டு உயர்வு சதவீதம் நகர்மன்ற தனி அலுவலரின் அதிகார வரம்பிற்குட்பட்டு வருவதாலும், தமிழ்நாடு நகராட்சிகள் பொறியியல் கையேடு விதிமுறை 2.7.2–ன்படியும் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

**தீர்மான எண். 34**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் – 5

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் அடிப்படை கட்டமைப்பு திட்டம் 2017–18–ன் கீழ் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப்பபணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.21422/2017/இ3 நாள்.19.09.2018–ல் சிப்பம் –4க்கான பணி தேர்வு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து சிப்பம் –4க்கான மதிப்பீடுகளுக்கும் தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.24545/2017/DO2 நாள்.08.01.2019–ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது.

இதனை தொடர்ந்து மேற்காணும் சிப்பம் –4க்கு 07.02.2019–ந் தேதியில் இரண்டு உறை ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. சிப்பம் –4 மதிப்பீடு ரூ.200.00 இலட்சம் பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளி (Technical Bid) திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டதில் திரு.டி.தமிழ்ராஜன், தேனி மற்றும் திரு.ஆர்.பரமானந்தம், தேனி ஆகிய இருவரின் தகுதிக்காண் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நிறைவு செய்வதால் மேற்படியாளர்களின் விலை விகித ஒப்பந்தப்புள்ளிகள் (Price Bid) 13.02.2019–ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது விபரம் பின்வருமாறு,

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.டி.தமிழ்ராஜன், தேனி | மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.98 % அதிகம் |
| 2 | திரு.ஆர்.பரமானந்தம், தேனி | மதிப்பீட்டினைக்காட்டிலும் 6.66 % அதிகம் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டினைக் காட்டிலும் கூடுதல் விலை விகிதமாக இருப்பதால், மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலை விகிதம் குறைவாக கொடுத்துள்ள திரு.டி.தமிழ்ராஜன், தேனி என்பவரின் மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.98% கூடுதல் விலை விகிதத்தினை குறைத்து தரக்கோரி சம்மதக்கடிதம் (Consent Letter) கோரியதில் மேற்படியார் தனது 19.02.2019 தேதிய கடிதத்தில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.77% உயர்வு சதவீதத்தில் மட்டுமே செய்து தர இயலும் என கடிதம் அளித்துள்ளது. தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மேற்காணும் திட்ட பணியினை 15.04.2019–க்குள் முழுவதுமாக முடித்து பணி முடிவறிக்கை நிதி பயனீட்டு சான்றிதழ் அளித்திட நகராட்சி நிர்வாக ஆணையர் ஆய்வு கூட்ட அறிவுரையில் பணிக்கப்பட்டுள்ளதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால், ஏற்படும் காலாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், மதிப்பீட்டு உயர்வு சதவீதம் நகர்மன்ற தனி அலுவலரின் அதிகார வரம்பிற்குட்பட்டு வருவதாலும், தமிழ்நாடு நகராட்சிகள் பொறியியல் கையேடு விதிமுறை 2.7.2–ன்படியும் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

**தீர்மான எண். 35**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் – 6</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பறைகள் பழுது நீக்கம் மற்றும் மராமத்து பணி மேற்கொள்ள தொகை ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நாள்.07.01.2019–ம் நாள் தனிஅலுவலர் அவர்களால் முன்அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிக்காக நாள்.15.02.2019–ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.எம்.முத்துக்கண்ணன் | 0.07 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.கே.ராமசாமி | 1.33% மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்தாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு திரு.எம்.முத்துக்கண்ணன் ஒப்பந்ததாரிடமிருந்து 0.07% மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மதிப்பீட்டு விலையில் 0.07% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.முத்துக்கண்ணன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 36**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் – 7</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான நிலம் ஏதும் இல்லாததால் நகராட்சியால் நடத்தப்பட்டு வரும் வாரச்சந்தை தற்போது நகராட்சி எல்லை 1 வது வார்டு, சங்குப்பிள்ளை புதுார் புல எண் 2/3, 1/1பி , 2/1 மற்றும் 1/1ஏ–ல் குத்தகை அடிப்படையில் ஆண்டு ஒன்றுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.2.00 இலட்சம் வீதம் 5 ஏக்கர் நிலத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10.00 இலட்சம் வீதம் மூன்றாண்டுகளுக்கு (01.04.2016 முதல் 31.03.2019 வரை) குத்தகை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு, வாரச்சந்தை நடைபெற்று வருகிறது. மேற்படி வாரச்சந்தை 01.04.2016–ம் நாள் முதல் மேற்படி நிலத்தில் வாரச்சந்தைகள் நடைபெற்று வரும் நிலையில் வரும் 31.03.2019–ம் நாளுடன் குத்தகை காலம் (மூன்று ஆண்டுகள்) முடிவடைவதால், மேற்படி சந்தையினை வேறு இடத்திற்கு மாற்றிகொள்ள தெரிவித்து கடிதம் அளித்த நிலையில், ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட 1 வது வார்டு பகுதியில் ஒழுங்குமறை விற்பனை கூடத்திற்கு சொந்தமான 17 எக்கர் நிலத்தில் நகராட்சி வாரச்சந்தைக்கு 5 ஏக்கர் நிலத்தினை ஒதுக்கீடு செய்யக்கோரி 03.12.2018–ம் நாள் கடிதம் அனுப்பப்பட்டத்தில், மேற்படி நிலத்தில் கடைகள் துவங்குவதற்கான பணிகள் நடைபெறுவதால், வாரச்சந்தைக்கு நிலம் ஒதுக்க இயலாது என தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் தற்போது வாரச்சந்தை நடைபெறும் நில பங்குதாரர்கள் நகராட்சி கேட்டுக்கொண்டதற்கிணங்க, மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு புல எண்.2/3, 1/1பி மற்றும் 2/1–ல் 3.1/2 ஏக்கர் நிலம் மட்டும் கால நீடிப்பு செய்ய சம்மதம் தெரிவித்தும், குத்தகை தொகையினை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 4.00 இலட்சம் வீதம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.14.00 இலட்சம் வழங்கக் கேட்டு கடிதம் அளித்ததை தொடர்ந்து, நகராட்சி வாரச்சந்தை இடம் மாற்றப்படும் நிலையில், ஏற்படும் செலவினத்தை கருத்தில் கொண்டு மேற்படி, நில உரிமையாளர்கள் கோரப்பட்ட தொகை முந்தைய குத்தகையைவிட கூடதலாக உள்ளதை விலை குறைப்பு செய்ய 01.02.2019–ம் நாளில் அறிவிப்பு அனுப்பப்பட்டதை தொடர்ந்து, மேற்படி நில உரிமையாளர்கள் வாரச்சந்தை 3.1/2 ஏக்கர் இடத்தினை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நடத்திக்கொள்ள விலை குறைப்பு செய்து ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 3.00 இலட்சம் வீதம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.10.50 இலட்சம் வழங்க கேட்டு 06.02.2019–ம் நாள் கடிதம் வழங்கியதை தொடர்ந்து, 07.02.2019–ம் நாள் மேற்படி நில உரிமையாளர்களிடம் ஆணையாளர் அவர்களால் நேரடி பேச்சுவார்த்தை நடத்தியதில் வாரச்சந்தை நடத்த 3.1/2 ஏக்கர் இடத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.10.00 இலட்சம் குத்தகை தொகைக்கு தீர்வு பேச்சு ஏற்பட்டதை தொடர்ந்து, மேற்படி தொகைக்கு இரண்டாண்டுகளுக்கு மட்டும் வாரச்சந்தை குத்தகைக்கு நடத்திக்கொள்ளவும், மேற்படி தொகையினை நில உரிமையாளர்களுக்கு வழங்க மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சியால் ஞாயிறு மற்றும் வியாழக்கிழமை வாரச்சந்தைகள் சுங்க வசூலுக்கான குத்தகை உரிமையினை 31.03.2021 முடிய உள்ள காலத்திற்கு பொது ஏலம் விடப்பட்டுலூளதாலும், நகராட்சியின் வருவாயை கருத்தில் கொண்டும் இடம் மாற்றுவதால் ஏற்படும் செலவினங்களை கருத்தில் கொண்டும் அதே இடத்தில் சந்தையினை நடத்தவும் தீர்வு பேச்சில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி, குத்தகை ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்திக்கொள்ளவும், நிபந்தனைகளின்படி தொகையினை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 37**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் :8**

ஒட்டன்சத்திரம் நகராட்சி அரசாணை (நிலை) எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.19.09.2008–ன்படி நகராட்சியில் கீழ்க்காணும் இனங்களுக்கு 01.04.2016 முதல் 31.03.2019 முடிய மூன்று ஆண்டுகளுக்கு சுங்க கட்டண வசூலுக்கான குத்தகை உரிமை பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விடப்பட்டு 31.03.2019 நாளுடன் மூன்று ஆண்டுகள் முடிவுறுவதால், மேற்படி இனங்களுக்கு மேலும் மூன்று ஆண்டுகளுக்கான குத்தகை உரிமைக்கு 25.01.2019 மற்றும் 01.02.2019 பொது ஏலம் கோரபட்டத்தில் ஒப்பந்தபுள்ளிகள் ஏதும் வரப்பெறாத நிலையில் மறுபொது ஏலத்தில் 08.02.2019–ம் நாளில் கோரப்பட்ட உயர்ந்த பட்ச ஏலம் கீழ்கண்டவாறு

| வ. எண் | குத்தகை இனங்கள் | உயர்ந்த பட்சம் ஏலதாரர்கள் | உயர்ந்த பட்சம் ஏல தொகை |
|---|---|---|---|
| 1 | அலுவலக வளாகத்தில் உள்ள தென்னை மற்றும் இலவ மரத்தின் மேல் மகசூல் செய்யும் குத்தகை உரிமை | திரு.பி.முனியப்பன், த/பெ.பொன்னுச்சாமி, வினோபா நகர், ஒட்டன்சத்திரம். | ரூ.4,000/– |

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி இனத்திற்கு மூன்றாவது அழைப்பாக உள்ளதாலும், அலுவலகத்தில் புதிய கட்டிடம் மற்றும் கூடுதலாக MCC திட்ட கட்டுமான பணிகள் காரணமாக அதிகளவிலான மரங்கள் அப்புறப்படுத்தப்பட்டுவிட்டதாலும், மேற்படி இனத்திற்கு மூன்றாவது அழைப்பாக உள்ளதாலும், நகராட்சியின் வருவாயினை கருதி உயர்ந்தபட்ச ஏலத் தொகையினை அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 38**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 9**

ஒட்டன்சத்திரம் நகராட்சி ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் (IUDM- 2018-19 & 2019-20) திட்டத்தின் கீழ் ரூ. 700.00 இலட்சம் மதிப்பீட்டில் சின்னக்குளத்தினை தூர்வாரி மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ள அரசாணை எண். 82 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.ஏ2) நாள்.23.08.2018–ன்படி, தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களால் ந.க.எண். 18281/2017/டி.ஒ2 நாள். 04.01.2019–ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 13.02.2019–ம் நாள் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை அவர்கள் வாயிலாக மது ஆட்ஸ் விளம்பர நிறுவனம், சென்னை மூலம் மாநில அளவிலான அரசு ஒப்பந்தப்புள்ளி மலரிலும் தி இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் நமது புரட்சித் தலைவி அம்மா தினசரி நாளிதழ்களில் அகில இந்திய அளவில் 09.01.2019–ம் நாளில் அறிவிப்பு வெளியீடு செய்தமைக்கான பட்டியல் தொகை ரூ.2,61,135/– மட்டும் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை சென்னை மது ஆட்ஸ் விளம்பர நிறுவனத்திற்கு வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி திட்டப்பணிக்கான அகில இந்திய அளவிலான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்தமைக்கான பட்டியல் தொகையினை வழங்கவும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 39**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 10**

அரசாணை நிலை எண்.20 நாள்.13.02.2019—ன்படி ஊரக மற்றும் ஊராட்சி துறை சட்டமன்ற பேரவை விதி எண்.110—ன் கீழ் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.02.2019—ம் நாளன்று வெளியிடப்பட்ட அறிவிப்பு வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 18 வார்டு பகுதிகளில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்கு அரசு வழங்கும் ஒருமுறை சிறப்பு உதவித் தொகை ரூ.2000/— திட்டத்திற்கு இந்நகராட்சி பகுதிகளில் உள்ளவர்களை கணக்கெடுத்து கணினியில் (Offline) மற்றும் (Online) மூலமாக பதிவேற்றம் செய்யும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.3.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி, தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 40**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 11**

ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆணையாரால் 2018—19 ஆண்டுக்கான 31.12.2018 முதல் 15.02.2019 முடிய பட்டுவாடா செய்யப்பட்ட செலவு சீட்டு எண் RF0692 முதல் RF0843 முடிய, WS0087 முதல் WS0116 முடிய மற்றும் TFV071 முதல் TFV088 முடிய தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும், பதிவுக்கும்.

**தீர்மான எண். 41**

அனுமதிக்கப்பட்டது.

இடம். ஒட்டன்சத்திரம்.
நாள். 15.02.2019

தனிஅலுவலர்
மற்றும் ஆணையாளர்,
ஒட்டன்சத்திரம் நகராட்சி.